**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 151 of 2025

Depositions of PW - 4 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : தங்கவேல்

Father's Name : ராமசாமிகவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது செஞ்சேரியில் வசித்து பிசினஸ் செய்கிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்தவர் என்னுடைய மாமா. கடந்த 03.12.2021 ஆம் தேதி காலையில் நான் வீட்டில் இருந்தபோது எனது உறவினர் ரத்தினசாமி எனக்கு போன் செய்து எனது மாமா அவருடைய இருசக்கர வாகனத்தில் பல்லடம் சென்று டெயிலர் கடைக்கு தேவையான நூல் வாங்கிக் கொண்டு கடைக்கு திரும்ப வந்து கொண்டிருந்த பொழுது சுல்தான்பட்டை நெடுஞ்சாலை துறை அலுவலகம் அருகே உள்ள சுவையகம் ஓட்டலில் எங்கள் ஊரைச் சார்ந்த நிஷாந்த் மற்றும் செஞ்சேரி சேர்ந்த பழனிச்சாமி ஆகியோர் டீ சாப்பிட்டு விட்டு மதியம் சுமார் 12.30 மணியளவில் இருந்த பொழுது எனது மாமா கந்தசாமி அவருக்கு சொந்தமான TVS XL SUPER TN 41 AE 6005 வண்டியில் மேற்கிலிருந்து கிழக்காக செஞ்சேரி செல்வதற்காக ரோட்டை கடந்த பொழுது பொள்ளாச்சியில் இருந்து சுல்தான்பேட்டை நோக்கி வந்த புல்லட் ரோட்டை கடந்து கொண்டிருந்த எனது மாமா

இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டதாக கூறினார்.

2. காயம்பட்ட எனது மாமாவை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக கூறியதன் பேரில் நானும் எனது உறவினர் உமாதேவியும் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது மாமாவை பரிசோதித்த மருத்துவர் 01.30 மணியளவில் மாமா இறந்துவிட்டதாக கூறினார். மறுநாள் உதவி ஆய்வாளர் எனது மாமாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபொழுது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்துவிட்டார்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.10 18:53:19 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**